தான் அண்ணா தி.மு.க. சின்னம் என்று சொல்லி, இன்றைக்கு இந்தியாவிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட கழகம், அண்ணா தி.மு. கழகம் சின்னம், இதுதான் நடைமுறை அரசியல் கட்சி களுக்கு. அப்படிப்பட்ட நடைமுறை நண்பருடைய கட்சிக்கு இருக்கிறதா? இன்றைக்கு ரெகக்னைஸ்டு பொலிட்டிகல் பார்ட்டி என்று அங்கீகரித்து, டில்லி எலெக்ஷன் கமிஷன் கொடுத் திருக்கிறதா என்பதனை அதற்குரிய ஆதாரத்தை உங்களிடத்திலே கொடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிற புத்தகத்தை வைத்துத்தான் நான் சொன்னேன். அதிலே ஒரு கட்சி என்று போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இப்போது இருக்கிற நிலைமையை வைத்து சட்டமன்ற விதிகளை வைத்து, அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு). அதிலே இருக்கலாம். இன்னொரு உறுப்பினருடைய பெயர்கூட அந்தக் கட்சி என்று தான் இருக்கிறது. இப்போது அதைப் பேசவேண்டியது இல்லை. (குறுக்கீடு). நீங்கள் கேட்டீர்கள், நேற்று என்னைப் பற்றிச் சொல்லி இருக்கிறீர்களே என்று. அதற்கு நான் பதில் சொல்லி விட்டேன். நீங்கள் கேட்டீர்கள், நான் பதில் சொல்லியிருக் கிறேன். உட்காருங்கள்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்.)

5. கவன ஈர்ப்பு

நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் அடைப்பான்கள் பொருத்தும் பணிகுறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, திரு. ம. சின்னசாமி அவர்கள் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம், நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் சட்டர்ஸ் பொருத்தும் பணி நிறுத் தப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம் நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் நீர்வழிந்தோடியில் 12.30 மீட்டர் அகலமும், 6.70 மீட்டர் உயரமும் உள்ள ஆறு கதவுகள் பொருத்தப்பட்டு வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இந்த அடைப்பான் கள் பொருத்தும் பணி (Erection of shutters) தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நிறுத்தப்படவில்லை. இப் பணி மேலும் நான்கு வாரங்களில் முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது. அடைப்பான்கள் பொருத்தும் பணி முடியும் வரை, நொய்யல் ஒரத்துப்பாளையம் நீர்த்தேக்கத்தில் வழிந்தோடியின் மட்டமாகிய 7.30 மீட்டர் ஆழம் வரை நீரைத் தேக்கி இதற்கு கூடுதலாக வரப்பெற்ற நீரை இந்த அணைக்குக் கீழுள்ள நொய்யல் தடுப்பு அணைக்கு (Barrage) அனுப்பி அங்கிருந்து ஊட்டுக் கால்வாய் மூலமாக ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திற்கு கொண்டுசென்று, பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் தென்மேற்குப் பருவமழை காலத்தில் எடுக்கப் பட்டன. இந்த முறையில் நொய்யல் ஆற்றில் வரப்பெற்ற நீர் முழுவதையும் சேதமில்லாமல் பாசனத்திற்கு பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, பாசனத்திற்கு பாதிப்பு ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை. தற்பொழுது நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் 53 மில்லியன் கன அடி நீரும், ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்தில் 68 மில்லியன் கன அடி நீரும் உள்ளது. இந்த நீர், பாசனத்திற்கு உரிய காலத்தில் பயன் படுத்தப்படும்.

முற்பகல் 11—25

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஷட்டர்கள் பொருத்தும் பணி எப்போது துவங்கப்பட்டது? துவங்கப்பட்ட காலத்தில் இத்தனை காலகெடுவுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று ஏதாவது காலகெடு விதிக்கப்பட்டு, அந்தக் கால கெடுவுக்குள் முடிக்கப்படாமல் அந்தப் பணி தாமதப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஒரத்துப்பாளையம் அணையில் நீர்த்தேக்கி வைக்கின்ற அந்த ''எரக்ஷன் ஆப் ஷட்டர்ஸ்'' என்று சொல்லப்படுகிற அடைப்பான்கள் பொருத் தும் பணி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நிறுத் தப்படவில்லை. இன்னும் 4 வார காலங்களிலே அந்தப் பணிகள் முடிக்கப்படும். ஆகவே, பாசன வசதிக்கு எந்தவிதமான இடையூறும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்